DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 173 /2022**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி | Father Name – சுருளிபொம்மையா கவுண்டர் | |
| Age | 78 | Village – | மல்லிங்காபுரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026.

**வாதிகள் தரப்பு முதல் விசாரணை**.

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு இரண்டாம் சாட்சியாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். 14.09.1989 ம் தேதியிட்ட எனது மனைவி பெயரில் 3 ½ செண்ட் நிலம் ஆவண எண்.877/1989 ன்படி தான பத்திரத்தின் SRO நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது மனைவி பெயரில் எனது மாமனார் எழுதிக்கொடுத்த தான பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், அந்த பத்திர விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது மனைவி எனது மாமனாரிடமிருந்து தானமாக வாங்கிய தான பத்திரத்தில் அந்த சொத்தின் நீள அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தானமாக கிடைத்த சொத்திற்கு மேற்கு பக்கம் போடி–உத்தமபாளையம் நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். எனது மனைவிக்கு தானமாக கிடைத்த சொத்திற்கு கிழக்கு பக்கம் 1ம் பிரதிவாதி ஜெயச்சந்திரன் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் தலைவாசல் உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள தலைவாசல் வைத்து எவ்வளவு காலமாகிறது என்றால் 15 முதல் 18 வருடங்கள்

இருக்கும். 1ம் பிரதிவாதி ஜெயச்சந்திரன் என்னுடைய மாமனார் மொல்லப்ப கவுண்டரின் ஆண் வாரிசுகளிடமிருந்து கிழக்கில் உள்ள சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கு வடக்கிலும் 1ம் வாதி முருகேஸ்வரி வீட்டிற்கு தெற்கிலும் 12 அடி பாதை உள்ளது என்றால் சரியல்ல, 10 அடி பாதைதான் உள்ளது. 1ம் பிரதிவாதி ஜெயச்சந்திரன் கிரையம் வாங்கியுள்ள நிலத்திற்கு செல்லக்கூடிய ஒரே பாதை மேற்படி 10 அடி பாதைதான் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு பட்டா வாங்கியுள்ளேனா என்றால் பட்டா வாங்கியுள்ளேன் அது தற்போது காணவில்லை. எனது வீட்டின் சர்வே எண் மற்றும் உட்பிரிவு என்ன என்றால் ஞாபகம் இல்லை. என்னுடைய வீட்டின் சர்வே எண்.909/4C3 என்றால் 909 என்று தெரியும், உட்பிரிவு ஞாபகம் இல்லை. தாவா பாதையானது வருவாய் துறை ஆவணங்களில் பாதை என தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி ஜெயச்சந்திரன் கிரையம் வாங்கிய நிலத்தில் வீடு கட்டி அதில் அவருடைய நான்கு சக்கர வாகனத்தை நிறுத்தி வருகிறார் என்றால் சரிதான், தாவா நடைபாதையில் கஷ்டப்பட்டு கொண்டு செல்கிறார். தாவா பாதையில் கேட் போட்டு மூடி நாங்கள் பயன்படுத்தக்கூடாது என்று 1ம் பிரதிவாதி ஜெயச்சந்திரன் இடைஞ்சல் எதுவும் செய்தாரா என்றால் அவ்வாறு இடைஞ்சல் செய்யவில்லை, தாவா பாதை அவருக்கு மட்டும் சொந்தம் என்று சொல்லி பிரச்சனை செய்தார். எனது மாமனாரின் ஆண் வாரிசுகள் தாவா பாதையையும் சேர்த்து 1ம் பிரதிவாதி ஜெயச்சந்திரனுக்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் வடக்கு பக்கம் வாசல் வைத்து தகரம் போட்டு அடைத்தால் அந்த தாவா பாதையில் வாகனங்கள் சென்று வர இடைஞ்சலாக இருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் 1ம் வாதி முருகேஸ்வரி பாதையில் தகரம் வைத்து அடைத்துள்ளார் என்றால் அவருடைய மதில் அளவுக்கு தகரம் வைத்து அடைத்துள்ளார். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் என் வீட்டின் வடக்கு பக்கம் மண் திட்டு அமைத்து அதன் மேல்

குழாய் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் பதிக்கப்பட்டுள்ளது. **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா பாதையில் ஒரு பகுதியை 1ம் வாதி ஆக்கிரமிப்பு செய்தும், நான் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்தும் 1ம் பிரதிவாதி தாவா பாதையை பயன்படுத்துவரை இடைஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிகள் துூய கரங்களுடன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என் மீது  காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டிருந்த புகாரின் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையில் தாவா பாதையை நில அளவையரை வைத்து அளந்து பார்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நானும் தாவா பாதையை ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகளின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்து வருவதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.04.07 17:26:12 +0530

District Munsif,
Bodinayakanur.